IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 111/2018 |
| | | P/W's | : | 1 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | Jeganathan | CASTE | : | |
| S/O. / W/O. | | RELIGION | : | |
| VILLAGE | | CALLING | : | |
| TALUK | | AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **26-10-2022**

**குறுக்கு விசாரணை (1ம் பிரதிவாதி தரப்பில்) :**

நீங்கள் என்ன படித்துள்ளீர்கள் என்றால் MCA படித்துள்ளேன். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் எங்கள் இருவருக்கும் பொதுவாக பாத்தியப்பட்ட கிணறு அதில் உள்ள நிலம் கூட்டுரிமை பாத்தியம் உள்ளதாக விளம்புகை செய்திட வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேலும், சொத்தில் உள்ள என்னுடைய அனுபவ சுவாதீனத்தில் தண்ணீர் பாய்ச்சிடும் உரிமையை இடையூறு செய்திடக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரியுள்ளேன். மேலும், கூட்டு சொத்தான தாவா சொத்தில் 2ம் பிரதிவாதி பெயரில் தனிப்பட்ட முறையில் மின் இணைப்பில் பெயர் மாற்றம் செய்திடக்கூடாது என பரிகாரம் கோரியுள்ளேன். மேலும், தாவா சொத்தில் 1ம் பிரதிவாதிக்கு 3ம் பிரதிவாதியால் பட்டா மாற்றம் செய்து கொடுக்கப்பட்டுள்ளதை செல்லாது என்றும் பரிகாரம் கேட்டுள்ளேன்.

கடந்த 20.06.2008ம் வருடம் நீங்களும், உங்கள் தாயார் மற்றும் 1ம் பிரதிவாதி ஆகியோர்கள் தாவா சொத்து மற்றும் குடும்ப சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை ஏற்படுத்தி கொண்டுள்ளீர்கள் என்றால் ஆம். பாகப்பிரிவினை செய்து கொள்ளப்பட்டுள்ள வா.சா.ஆ.2ல் கண்டுள்ளதை பொறுத்து உங்களுக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்றால் அவ்வாறு சொல்வது தவறு. ஆட்சேபணை உள்ளது. அவ்வாறு ஆட்சேபணை வா.சா.ஆ.2ஐ பொறுத்து உள்ளதாக உங்களால் வழக்குரை, முதல் விசாரணை பிரமான வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் தவறு, சொல்லியுள்ளேன். நீங்கள் வா.சா.ஆ.2-ஐ பொறுத்து ஆட்சேபணை உள்ளது என்று வழக்குரையிலோ, முதல் விசாரணை பிரமான வாக்குமூலத்திலோ சொல்லப்படவில்லை, வழக்கிற்காக ஆட்சேபணை உள்ளதாக பொய்யாக சாட்சியம்

அளிக்கிறீர்கள் என்று சொன்னால் அவ்வாறு சொல்வது சரியல்ல. பாகப்பிரிவினை செய்து கொள்ளப்பட்ட ஆவணமான வா.சா.ஆ.2ல் சி செடியூலில் 5ம் லக்க சொத்தை பொறுத்து தான் உங்களால் தண்ணீர் பாய்ச்சும் உரிமை கோரப்படுகிறது என்றால் ஆம். வா.சா.ஆ.2 ஆன பாகப்பிரிவினை ஆவணத்தில் சி செடியூலில் உள்ள 5ம் லக்க சொத்து மற்றும் இதர சொத்துக்கள் குறித்து பாகப்பிரிவினை செய்து கொள்ளப்பட்டதை பொறுத்து உங்களால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என்றால் இல்லை. பாகப்பிரிவினை செய்து கொள்ளப்பட்ட வா.சா.ஆ.2 ஆவணத்தை பொறுத்து உங்கள் தரப்பில் செல்லத்தக்கது அல்ல என்று பரிகாரம் ஏதேனும் கோரியுள்ளீர்களா என்றால் இல்லை.

வா.சா.ஆ.2ல் 5ம் பக்கத்தில் **”நாம் அடைந்துகொள்ளும் சொத்துக்களில் ஏற்றத்தாழ்வுகள் இருப்பினும், நாம் அனைவரும் மனப்பூர்வ சம்மதமாய் ஒப்புக்கொண்டு நம் மனப்பூர்வ சம்மதமாய் எழுதிகொண்ட பாகப்பிரிவினை பத்திரம்”** என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சாட்சி ஆவணத்தை பார்வையிட்டு சரி என்று சாட்சியம் அளித்தார். மேலும், வா.சா.ஆ.2ல் 6ம் பக்கத்தில் **”ஒரு நபர் அடையும் சொத்தை பொறுத்து மற்ற நபர்களுக்கு எவ்வித பாத்தியமும் சம்மந்தமும் பின் தொடர்ச்சியும் உரிமையும் கிடையாது என்று உறுதி கூறுகிறோம்”** என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சாட்சி ஆவணத்தை பார்வையிட்டு சரி என்று சாட்சியம் அளித்தார். மேற்கண்ட வாசகங்கள் தொடர்பாக பத்திரம் பதிவு செய்யும்போது என்னிடமோ எனது தாயாரிடமோ படித்து காட்டப்படவில்லை, கையொப்பம் மட்டும் வாங்கி கொண்டார்கள்.

நீங்கள் சொல்வது போல், வா.சா.ஆ.2ல் கண்டுள்ள 5, 6ம் பக்கத்தில் உள்ள சங்கதிகளை பொறுத்து உங்களுக்கோ உங்கள் தாயாருக்கோ படித்து காட்டப்படவில்லை என்பதை வழக்குரையிலோ, முதல் விசாரணை பிரமான வாக்கு மூலத்திலோ குறிப்பிட்டு சொல்லியுள்ளீர்களா என்றால் நான் சொல்லவில்லை. வழக்கில் கண்டுள்ள சொத்தானது எவ்வாறு உங்களுக்கு பாத்தியம் என்பதை எதன் அடிப்படையில் சொல்லியுள்ளீர்கள் என்றால் பாகப்பிரிவினை ஆவணத்தின் அடிப்படையில் சொல்லியுள்ளேன். பாகப்பிரிவினை ஆவணமான வா.சா.ஆ.2ஐ ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் பாகப்பிரிவினை ஆவணத்தை பொறுத்த வரை மாற்றுக்கருத்து இல்லை. ஆனால் கிணறு பாத்தியம் விடுபட்டுள்ளதை பொறுத்தும் பிரதிவாதிக்கு மட்டும் சொல்லப்பட்டுள்ளதை பொறுத்து ஆட்சேபணை செய்திருந்தோம். வா.சா.ஆ.2ல்

பாகப்பிரிவினை செய்து கொள்ளப்பட்ட சொத்துக்களில் மதிப்பீடு குறித்து சொல்லப்பட்டுள்ளதா என்றால் சாட்சி வா.சா.ஆ.2 ஆவணத்தை பார்வையிட்டு ஏ செடியூல் சொத்து தாயாருக்குரிய சொத்துக்களின் மதிப்பு என்பது ரூ.2,50,000/-. 1ம் பிரதிவாதியான என்னுடைய சகோதரருக்கு பி செடியூல் பாக சொத்தின் மதிப்பு ரூ.15 லட்சம் ஆகும். சி செடியூல் பாக சொத்தானது வாதியான எனக்கு சொத்தின் மதிப்பு ரூ.15 லட்சம் ஆகும் என்று சாட்சியம் அளித்தார். வா.சா,ஆ2ல் பாகப்பிரிவினை செய்து கொள்ளப்பட்ட சொத்துக்களில் உங்களுக்கும் 1ம் பிரதிவாதியான உங்கள் சகோதரருக்கும் சமமான மதிப்பீடு கொண்டு தான் பாகம் பிரித்து கொள்ளப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால், தோப்பு பொறுத்து கிணறு பிரிவினை செய்துகொள்வதை பொறுத்தவரை பொதுவானது என்று முடிவு செய்யப்பட்டுள்ளதை வா.சா.ஆ.2ல் காட்டப்படவில்லை.

தோப்பில் உள்ள சொத்து பொதுவானது என்று எப்போது பேசப்பட்டது என்றால் பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்தி கொள்வதற்கு ஒருமாதத்திற்கு முன்பு பேசி முடிவு செய்யப்பட்டது. யார் யார் பேசி முடிவு செய்தார்கள் என்றால் என்னுடைய தாயார், எங்களது பெரியம்மாள் மகன் ஜெயவீரன், எங்களது மாமா தன்ராஜ் ஆகியோரும் மற்றும் சில பெரியவர்களும் பேசி முடிவு செய்யப்பட்டது. வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை ஆவணம் யாரால் தயார் செய்யப்பட்டது என்றால் 1ம் பிரதிவாதி ஏற்பாட்டின் படி வா.சா.ஆ.2 தயார் செய்யப்பட்டது. வா.சா.ஆ.2 பதிவு செய்யும்போது உங்களது உங்களது பெரியம்மாள் மகன் ஜெயவீரன், உங்களது மாமா தன்ராஜ் ஆகியோரும் மற்றும் சில பெரியவர்களும் பத்திர அலுவலகத்திற்கு உடன் வந்திருந்தார்களா என்றால் ஆம். மேலும், என்னுடைய சகோதரி ஹேமலதா அவர்களும் வந்திருந்தார் என்று சாட்சியம் அளித்தார். உங்களது சகோதரிக்கு பாகம் ஏதேனும் கொடுக்கப்பட்டதா என்றால் வா.சா.ஆ2ல் கண்டுள்ள சொத்தை பொறுத்து பாகம் கொடுக்கப்படவில்லை, வேறு சொத்தில் பாகம் கொடுக்கப்பட்டது. பத்திர அலுவலகத்தில் வா.சா,ஆ.2ஐ பொறுத்து சார்பதிவாளர் அவர்களால் படித்து காட்டப்பட்டு சரியாக உள்ளதா என்று கேட்டுக்கொள்ளப்பட்டு அதன்பின்னிட்டு தான் பதிவு செய்யப்பட்டதா என்றால் ஆம். அப்போது உங்கள் தரப்பில் வா.சா.ஆ.2ஐ பொறுத்து ஆட்சேபணை ஏதேனும் தெரிவித்துள்ளீர்களா என்றால் எனக்கு எதுவும் படித்து காட்டப்படவில்லை. நாளது தேதி வரை உங்கள் தரப்பில் வா.சா.ஆ.2ஐ பொறுத்து பத்திர பதிவு அலுவலகத்தில் ஏதேனும் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டதா என்றால் இல்லை. ஏனெனில், விடுபட்ட கிணறு பாத்தியத்தை பொறுத்து 1ம்

பிரதிவாதியால் ஒரு சம்மத பத்திரம் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டு, பாகப்பிரிவினை பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது வந்ததற்கு பின்னிட்டு சம்மத பத்திரத்தை பதிந்துகொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டதால் சார்பதிவாளரிடம் ஆட்சேபணை தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. வா.சா,ஆ.2 பதிவு செய்யப்பட்டுள்ளதில் விடுபட்டுள்ள விபரங்கள் குறித்து உங்களுக்கு எப்போது தெரியவந்தது என்றால் பத்திரம் பதிவு செய்யப்பட்ட அன்றைய தினத்திலேயே தெரியவந்தது. விடுபட்ட சொத்தை பொறுத்து சம்மத பத்திரம் ஏற்படுத்தி கொள்ளப்பட்டு அதில் சம்மத பத்திரம் ஏற்படுத்தி கொண்டு பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் கிடைத்ததற்கு பின்னிட்டு சம்மத பத்திரத்தையும் சேர்த்து திருத்தல் பத்திரம் பதிவு செய்து கொள்ள வேண்டியது என சம்மத பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேலும், சாட்சி திருத்தல் பத்திரம் உடனடியாக செய்ய முடியாது என்று சகோதரர் தெரிவித்தார். மேலும், சம்மத பத்திரத்தை வைத்துக்கொண்டு பத்திரம் வந்த பிறகு பதிந்து கொடுப்பதாக சொன்னார். பாகப்பிரிவினை ஆவணம் பதிவு செய்யப்பட்டதற்கு பின்னிட்டு வா.சா,ஆ.2 உங்கள் கைவசம் எப்போது கிடைத்தது என்றால் நான் சென்னையில் பணியாற்றி வந்ததால் 4 மாதத்திற்கு பின்பு வா.சா.ஆ.2 எனக்கு கிடைத்தது.

வா.சா.ஆ.2 உங்களுக்கு கிடைத்ததற்கு பின்னிட்டு உங்கள் தரப்பில் திருத்தல் பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்தி கொள்வது தொடர்பாக உங்கள் சகோதரரிடம் கேட்டீர்களா என்றால் சம்மத பத்திரம் இருந்ததால் தேவையில்லை என்றும், சகோதரர் தெரிவித்தார், மேலும், பேசியபடி தண்ணீர் பாய்ச்சிக்கொண்டு வருகிறோம் என்றும் தெரிவித்தார். சம்மத பத்திரம் ஏற்பட்டுள்ளதால் திருத்தல் பத்திரம் தேவையில்லை என்றும், பேசியபடி தண்ணீர் பாய்ச்சிக்கொண்டும் வருகிறோம் என்றும் உங்கள் சகோதரர் சொன்னதாக சொல்லக்கூடிய சங்கதிகளை பொறுத்து வழக்குரையிலோ, முதல் விசாரணை பிரமான வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளீர்களா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு நீங்கள் சொல்லியுள்ளதாக சாட்சியம் அளிக்கக்கூடியது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள், உங்கள் தரப்பில் திருத்தல் பத்திரம் குறித்தோ தண்ணீர் பாய்ச்சிக்கொண்டு வருவது குறித்தோ எதுவும் குறிப்பிட்டு தெரிவிக்கப்படவில்லை என்றால் அவ்வாறு சொல்வது தவறு. மேலும், சாட்சி கடந்த 25.07.2018 அன்று 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் உள்ள மின் இணைப்பை தன்னுடைய பெயருக்கு மட்டும் மாற்றுவதற்கு மின்சார வாரியத்தில் மனு கொடுத்தது குறித்து கேள்விப்பட்ட போதும், எங்களுடைய தாயார், எங்களது பெரியம்மா மகன்

ஜெயவீரன், சகோதரி ஹேமலதா, பத்திர எழுத்தர் கல்யாணி மற்றும் சில உறவினர்கள் ஆகியோர்களும் என்னுடைய சகோதரரான 1ம் பிரதிவாதியிடம் திருத்தல் பத்திரம் பதிந்து கொள்வதாக தெரிவித்தார்கள். கடந்த 20.06.2018ம் தேதியில் பதிவு செய்யப்பட்டுள்ள வா.சா,ஆ2 பாகப்பிரிவினை ஆவணத்தில் சி செடியூல் சொத்தில் 5ம் லக்க சொத்தை பொறுத்து எப்போது உங்கள் பெயருக்கு பட்டா மாற்றம் செய்து கொண்டீர்கள் என்றால் சுமார் 2009ம் வருடத்திற்கு முன்பே பட்டா மாற்றம் செய்து கொள்ளப்பட்டது. சர்வே எண்.52/1சி உங்கள் பெயருக்கு பட்டா உரிமை மாற்றம் செய்யப்பட்டுவிட்டது என்றால் ஆம். உங்கள் தரப்பில் பட்டா உரிமை மாற்றம் செய்யப்பட்டது சர்வே எண்.52/1சிக்கு மட்டும் தான் என்றால் ஆம். சர்வே எண்.52/1ஏ சொத்திற்கு உங்கள் தரப்பில் பட்டா உரிமை மாற்றம் செய்திட மனு கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதியான என்னுடைய சகோதரர் கூட்டுப்பட்டாவாக மாற்றி தருவதாக தெரிவித்தார். 2009ம் வருட கால கட்டத்திலேயே சர்வே எண்.52/1ஏ மற்றும் 52/1பி ஆகிய சொத்துக்களை பொறுத்து 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா உரிமை மாற்றம் செய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேலும், சாட்சி பட்டா உரிமை மாற்றம் செய்யப்பட்டது குறித்து கடந்த 25.07.2018ம் தேதியில் தான் எனக்கு தெரிய வந்தது. சர்வே எண்.52/1ஏ சொத்தை பொறுத்து உங்கள் தரப்பில் எந்த காலத்திலும் கூட்டு பட்டாவாக மாற்றம் செய்திட வேண்டி கேட்கப்படவில்லை, வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் அவ்வாறு சொல்வது தவறு.

வா.சா.ஆ,3 சம்மத பத்திரம் எங்கு தயார் செய்யப்பட்டது என்றால் 1ம் பிரதிவாதியான என்னுடைய சகோதரரால் மதுரை மாவட்டம், தல்லாகுளத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது. வா.சா.ஆ,3 ஆவணமான சம்மத பத்திரத்தை உங்கள் தரப்பில் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்யப்பட்டது என்றால் ஆம். வா.சா.ஆ.3ல் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை என்றால் ஆம். வா.சா.ஆ.3ல் 2வது பக்கத்தில் முதல் வரியில் சி செடியூல் 4ம் லக்க சொத்தில் கண்ட சர்வே எண்.52/1பி என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சாட்சி ஆவணத்தை பார்வையிட்டு அது தவறு என்று சாட்சியம் அளித்தார். வா.சா.ஆ,3 ஆவணம் தயார் செய்தவர் குறித்து குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சாட்சி ஆவணத்தை பார்வையிட்டு சரிதான் என்று சாட்சியம் அளித்தார். ஆனால் தயார் செய்து கொடுத்தவர் 1ம் பிரதிவாதியான என்னுடைய சகோதரர் ஆவார். வா.சா.ஆ,3 சம்மத

பத்திரம் கடந்த 20.06.2008ல் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் ஆம். வா.சா,ஆ.3ல் பத்திரம் எந்த தேதியில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 13.06.2008 ஆகும். வா.சா.ஆ,3 எந்த தேதியில் வாங்கப்பட்டுள்ளது என்றால் 13.06.2008 ஆகும். வா.சா.ஆ.3 எந்த தேதியில் எழுதப்பட்டுள்ளது என்றால் 20.06.2008 ஆகும். வா.சா.ஆ,3 குறித்து உள்ள விபரங்கள் உங்களுக்கு நேரடியாக தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வா.சா,ஆ,3 குறித்து உங்களுக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்பதினால், வழக்கில் உங்களால் கோரப்பட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் அவ்வாறு சொல்வது சரியல்ல. சாட்சி சிறிது நேரம் கழித்து சம்மத பத்திரம் இரண்டு நகல்கள் எடுக்கப்பட்டதாகவும் சாட்சியம் அளித்தார். அவ்வாறு இரண்டு நகல்கள் எடுக்கப்பட்ட விபரம் குறித்து உங்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையிலோ, முதல் விசாரணை பிரமான வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளீர்களா என்றால் இல்லை.

வா.சா.ஆ,4ன்படி உங்களுக்கு பாகமாக கிடைக்கபெற்ற சொத்தை பொறுத்து சபரிநாதன் என்பவருக்கு ஈடுகடன் எழுதிகொடுத்துள்ளீர்கள் என்றால் ஆமாம். மேலும், சாட்சி வா.சா.ஆ.4ல் கூட்டுரிமையாக கிடைக்க பெற்ற சொத்தும் மற்றும் மற்றொரு பாத்திய சொத்து ஆகிய அனைத்தும் ஈடுகடன் எழுதி வைத்தேன். கூட்டுரிமை பாத்தியமாக சொல்லக்கூடிய கிணற்றை பொறுத்து இதுநாள்வரை பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பதிவு செய்து தரப்படவில்லை. வா.சா.ஆ,4ல் கடந்த 20.06.2008ம் தேதி வா.சா.ஆ.2ல் உங்களுக்கு கிடைத்த பாக சொத்தை பொறுத்து தான் ஈடு வைக்கப்பட்டது என்றும், சம்மத பத்திரம் குறித்து சொல்லப்படவில்லை என்றால் சம்மத பத்திரத்தில் கிணறு பாத்தியம் எனக்கு எவ்வாறு பாத்தியப்பட்டுள்ளது என்பது குறித்து வா.சா.ஆ,4ல் சொல்லியுள்ளேன். நீங்கள் சொல்வது போல், வா.சா.ஆ.4ல் சம்மத பத்திரம் குறித்து தெரிவித்துள்ளீர்களா என்றால் சாட்சி வா.சா.ஆ.4ல் கண்டுள்ள சொத்து விபரத்தை படித்து காட்டி சொல்லப்பட்டுள்ளது என்றார். சொத்து விபரம் குறித்து கேட்கப்படவில்லை, சம்மத பத்திரம் குறித்து வா.சா.ஆ.4ல் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. உங்களுக்கு பதிவு செய்து கொடுக்கப்பட்டுள்ள சொத்தை தவிர, சர்வே எண்.52/1ஏ சொத்தை பொறுத்து ஆவணங்கள் உற்பத்தி செய்து வழக்கில் வா.சா.ஆ.4 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அவ்வாறு சொல்வது தவறு.

1ம் பிரதிவாதியான உங்களது சகோதரர் பத்திரத்தை பதிவு செய்து கொடுக்க வரவில்லை என்று காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்துள்ளீர்களா என்றால் அதற்கு அவசியம் ஏற்படவில்லை. வா.சா,ஆ.3 சம்மத பத்திரம் 1ம் பிரதிவாதியால்

எந்த காலத்திலும் உங்களுக்கு எழுதி கொடுக்கவில்லை, அதனால் தான் உங்களால் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் அவ்வாறு சொல்வது தவறு. புகார் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. தொடர்ந்து தண்ணீர் பாய்ச்சுவது, இடையூறு எதுவும் ஏற்படவில்லை. உங்களுடைய முதல் விசாரணை பிரமான வாக்குமூலத்தில் பிவிசி பைப் மூலம் உங்கள் நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சி வருவதாக சொல்லப்படுவதை பொறுத்து வழக்குரையில் சொல்லியுள்ளீர்களா என்றால் தண்ணீர் பாய்ச்சுவதாக சொல்லியுள்ளேன். 20.06.2008ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஆவணமான வா.சா,ஆ.2ல் பி செடியூல் சொத்தில் 4ம் அயிட்ட சொத்து இந்த 1ம் பிரதிவாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்டது, அதில் உங்களுக்கு எந்தவித உரிமையும் இல்லாமல் சட்டத்திற்கு புறம்பாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் அவ்வாறு சொல்வது தவறு.

வா.சா.ஆ,7 உங்களுக்கு எப்போது கைக்கு கிடைத்தது என்றால் வா.சா,ஆ.7 எழுதி கொடுத்த அன்றைய தேதியில் எனக்கு அசல் கொடுக்கப்பட்டுள்ளது. நகல் 1ம் பிரதிவாதியான என்னுடைய சகோதரருக்கு கொடுத்துள்ளேன். வா.சா.ஆ.7ல் கண்டுள்ள கையொப்பம் 1ம் பிரதிவாதியினுடையது அல்ல, அதில் கண்டுள்ள சங்கதிகள் யாவும் 1ம் பிரதிவாதிக்கு தெரியாது என்று சொன்னால் அவ்வாறு சொல்வது தவறு. மேலும், சாட்சி வா.சா.ஆ,7 என்பது அதில் கண்டுள்ள சொத்தை பொறுத்து என்னால் அனுபவம் செய்ய இயலாது என்பதினாலும், நான் சென்னையில் பணியாற்றி வருவதாலும் என்னுடைய சகோதரரான 1ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுக்கப்பட்டுள்ளது. அதன்படி 1ம் பிரதிவாதியே அனுபவம் செய்து வந்தார். தற்போது சர்வே எண்.52/1சி என்பது யார் அனுபவத்தில் உள்ளது என்றால் என்னுடைய அனுபவ சுவாதீனத்தில் தான் உள்ளது. சர்வே எண்.52/1சி-ல் தகர செட்டு போடப்பட்டுள்ளதா என்றால் ஆம். மேற்படி தகர செட்டு நீங்கள் தங்குவதற்காக போடப்பட்டுள்ளதா என்றால் இல்லை, மாட்டிற்காக போடப்பட்டுள்ளது. மேற்படி தகர செட்டில் மின் இணைப்பு உள்ளதா என்றால் ஆம். தகர செட்டு போடப்பட்டு எத்தனை வருடம் இருக்கும் என்றால் சுமார் 2 1/2 வருடங்கள் இருக்கலாம். வா.சா,ஆ,1 ஆன தோராய வரைபடத்தில் தகர செட்டு குறித்து சொல்லியுள்ளீர்களா என்றால் இலலை. தண்ணீர் சொத்தில் பாய்வது குறித்து காட்டியுள்ளேன். வா.சா.ஆ.1 ஆன தோராய வரைபடத்தில் GF-க்கு இடையில் பாதை

உள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் இல்லை, மாறாக IJ-க்கு இடையில் உள்ளது தான் பாதையாக உள்ளது. சர்வே எண்.52/1சிக்கு செல்லக்கூடிய பாதை என்பது எந்த பகுதியில் என்றால் கிணறுக்கு செல்லக்கூடிய 10 அடி பாதையில் தான் உள்ளது. வா.சா.ஆ.1 தோராய வரைபடத்தில் உங்களுடைய இடத்திற்கு செல்லக் கூடிய பாதை குறித்து சொல்லியுள்ளீர்களா என்றால் இதில் சொல்லவில்லை, தண்ணீர் பாய்ச்சுவது தொடர்பாக தான் சொல்லியுள்ளேன்.

கடந்த 20.06.2008ம் தேதியிட்ட பாகபத்திரத்தின்படி தற்போது வரை அனுபவித்து வருகிறீர்கள் என்றும், நீங்கள் 1ம் பிரதிவாதியிடம் தண்ணீர் பாய்ச்சும் உரிமை கேட்டதின் அடிப்படையில் உங்களுக்கு பாத்தியப்பட்ட தென்னை மரங்கள் 10 மேல் மகசூல் 1ம் பிரதிவாதி எடுத்துக்கொள்ள வேண்டியது என்றும், 1ம் பிரதிவாதியின் அனுமதியின் பேரில் தான் தண்ணீர் பாய்ச்சி கொண்டு வருகிறீர்கள் என்று சொன்னால் அவ்வாறு எந்தவித பேச்சுவார்த்தையும் பேசிக்கொள்ளவில்லை. கூட்டுரிமை கிணறு உள்ளதால் தண்ணீர் பாய்ச்சிக்கொண்டு வருகிறேன். பதிவு சட்டப்படி தாவா சொத்துக்களுக்குண்டான மதிப்பீடு குறித்து சரியாக மதிப்பீடு செய்யப்படாமல் நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது என்றால் அது தவறு. குறைவான மதிப்பீடு செய்யப்பட்டு தாவா சொத்துக்களுக்குண்டான நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதால் இந்த தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் அது தவறு. 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரையில் வா.சா.ஆ,3 மற்றும் வா.சா.ஆ,7 ஆகியவற்றில் கண்டுள்ள 1ம் பிரதிவாதியின் கையொப்பம் குறித்து மறுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. அவ்வாறு வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.7ல் 1ம் பிரதிவாதியின் கையொப்பம் குறித்து நிரூபணம் செய்திட உங்கள் தரப்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்றால் தேவைப்பட்டால் எடுக்கப்படும்.

உங்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையில் பாரா 11ல் கூட்டுப்பட்டா குறித்து மனு செய்து அது சம்பந்தமாக பரிசீலனை செய்யப்படவில்லை என்று சொல்லியுள்ளீர்கள் என்றால் ஆம். அவ்வாறு உங்களுடைய மனு குறித்து பரிசீலனை செய்யப்படவில்லை என்பது குறித்து மேலதிகாரியிடம் மனு குறித்து நடவடிக்கை எடுத்தீர்களா என்றால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதால் மேல் நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்காக உங்களால் வருவாய் துறையில் கூட்டுப்பட்டா மாற்றம் செய்வதற்கு மனு கொடுத்துள்ளீர்கள் என்றால் அது தவறு. பொதுவாக பட்டா மாற்றம் செய்வது சம்பந்தமாக பதிவு செய்யப்பட்ட

ஆவணங்களின் அடிப்படையில் தான் வட்டாட்சியர், மின் பொறியாளர் ஆகியோர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்றால் இல்லை. பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் அடிப்படையில் 2, 3 பிரதிவாதிகள் ஆவணங்களை பரிசீலனை செய்து 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக பெயர் மாற்றம் செய்துள்ளார்கள் என்று சொன்னால் அது தவறு. 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தான சர்வே எண்.52/1ஏ மற்றும் 52/1பி-ஐ பொறுத்து குறைந்த விலைக்கு கிரையம் செய்து கொடுத்திட வேண்டி கேட்டுக்கொண்டு அதற்கு 1ம் பிரதிவாதி மறுத்ததால் காழ்ப்புணர்ச்சி காரணமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் அவ்வாறு சொல்வது தவறு.

நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையில் தாவா சொத்தில் 98 தென்னை மரங்கள் இருப்பதாக தெரிவித்துள்ளார் என்றால் அவ்வாறு சர்வே எண்.52/1ஏ-ல் 98 தென்னை மரங்கள் இருப்பதற்கு வாய்ப்பில்லை. வா.சா.ஆ,2 பொறுத்து உங்கள் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் இந்த 1ம் பிரதிவாதிக்கு எதிராக அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் இடையூறு செய்திட வேண்டி வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.7 ஆவணம் உற்பத்தி செய்யப்பட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் அவ்வாறு சொல்வது தவறு. தாவாவில் உங்களால் கோரப்பட்டுள்ள பரிகாரம் தவறானது, அதனால் தாவா பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல, தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்று சொன்னால் அவ்வாறு சொல்வது தவறு.

(ஒம்.) திரு. T. கோகுலகிருஷ்ணன், பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி